O.S.No. 22/2014
20.03.2020.

வா.சா.2.திரு.விஜயன், த.பெ.ராமையா அம்பலம்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

12ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

இந்த வழக்கு சொத்துக்கள் பற்றிய விவரம் தெரியுமா என்றால் சமாதி பற்றி தெரியும். பிராதில் மொத்தம் எத்தனை இலக்கச் சொத்துக்கள் உண்டு என்றால் தெரியாது. 12ம் பிரதிவாதி ரவீந்திரனை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் 12ம் பிரதிவாதியின் எந்த சொத்து சம்பந்தபட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் வாதிகளுக்கு உறவினரா என்றால் ஆம். வாதிகளின் தகப்பனார் கருப்பையாவை தெரியுமா என்றால் தெரியும். கருப்பையாவின் தந்தை வீரணன் அம்பலத்தை தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்துக்கள் வீரணன் அம்பலத்திற்கும், அவர் மகன் கருப்பையாவிற்கும் பூர்வீக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். 20.11.1934-ல் எழுதி வைக்கப்பட்டதாக சொல்லப்படும் உயில் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. உயிலின் விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சமாதியையும், குடியிருக்கும் வீட்டையும் தவிர வாதிகள் மற்றும் அவரது மூதாதையர்கள் அனைத்து சொத்துக்களையும் விற்றுவிட்டார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வீரணன் அம்பலம் எங்கு வேலை பார்த்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. உயில் எழுதி வைக்கப்பட்ட இரண்டு மாதங்களில் வீரணன் அம்பலம் இறந்து விட்டார் என்றால் தெரியாது. தர்ம கைங்கரியங்கள் வாதிகள் நடத்துவதற்கு நான் சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். அப்படி எத்தனை முறை நான் அந்த கைங்கரியங்களுக்கு சென்றிருப்பேன் என்றால் 10 முறை சென்றிருப்பேன். தர்ம கைங்கரியங்கள் நடந்துள்ளதை என்பதை நிருபிக்கவும் நான் அதற்கு சென்றதை நிருபிக்கவும் நீதிமன்றத்தில் ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது. அந்த உயிலை எழுத வீரணன் அம்பலத்திற்கு சட்டப்படி உரிமை கிடையாது என்றால் தெரியாது. வீரணனின் குமாரர் கருப்பையாவிற்கு 4வது இலக்க சொத்து பூர்வீக பாத்தியப்பட்டது என்றால் தெரியாது. கருப்பையா மட்டும் தான் வீரணன் அம்பலத்தின் வாரிசு என்றால் சரிதான். வீரணன் இறந்த பின் கருப்பையாவும், அவருடைய தாயாரான கருப்பாயியும் 4வது இலக்கச் சொத்தை 27.02.1937ம் வருடமே விற்று விட்டார்கள் என்றால் தெரியாது. கடந்த 83 ஆண்டுகளாக 12ம் பிரதிவாதியும் அவருடைய தகப்பனாரும் அவரின் முன் சுவான்தார்களும் ஆண்டு அனுபவித்து வருகிறார்கள் என்றால் தெரியாது. அந்த உயில் நடைமுறைக்கே வரவில்லை என்றாலும், உயிலில் கண்டபடி எந்த ஷரத்துக்களும் நிறைவேற்றப்படவில்லை என்றாலும் தெரியாது.

மறுவிசாரணை இல்லை.